𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

௩-ம் புத்தகம்

பத்திரகிரயம்
1வரு 2—12—0
6மீ 1—8—0
௩மீ 0—14—0
1காபி 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

BRAHMAVIDYAPATHRIKÁ.

௰௮-ம் இலக்கம்

பத்திரகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible] [illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯வரு மார்ச்சுமீ ௧௫உ சர்வதாரி வரு பங்குனிமீ ௪உ

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நம் ப்ரம்மவித்தியா பத்திரிகாபிமானிகளில் கையொப்பப் பணம் அனுப்பாதிருக்கும் நண்பர்களே!

இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி இப்பொழுது 9-மாசங்கள் கழிந்தும் நீங்கள் இதுவரையில் உங்கள் கையொப்பத் தொகைகளை யனுப்பிவிட இசையாது ஆலசியமாயிருந்தால் இப்பொது நன்மையை நாம் தளர்வுறாது நடத்துதல் எப்படியாம். உங்கள் பேருதவிகளையே ஆதாரமாக நம்பி இவ்வுலோகோபகார நன்முயற்சியை மேற்கொண்ட நாம் அது கிடைக்கப்பெறுதொழியின் மற்றதற்கு யாதுசெய்வோம். பத்திரிகை அச்சிடுதற்கும் காகிதமுதலியன வாங்குதற்கும் தபாற்செலவு கொடுத்தற்கும் அவ்வப்பொழுது எவ்வளவு பொருள் வேண்டுமென்பது நீங்களறியாததன்றே. உங்களில் ஒவ்வொருவரும் "நம் தொகை சிறிதுதானே இஃதவர்க்கோர் பொருட்டாமெல்ல வனுப்புவோம்" என எண்ணிப் பெரும் பாலராங்ஙனமிருப்பின், நங்கருமம் எக்கதியுறும். ஆதலின், இவைகளைச் சற்றே சிந்தித்து உங்கள் கையொப்பத் தொகைகளை உடனே அனுப்பிவிடுதலே நீங்கள் எமக்குச் செயற்கரியதொரு பேருபகாரமாம்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்; சர்வதாரி வரு பங்குனி-மீ 4-உ வெள்ளிக்கிழமை.

கடவுள்.

முன்தொடர்பு.

—:o:—

இனி "முற்றிலும் புலன்களுக்குப் புறம்பான அப்பொருளை ஒப்புவதற்கு முக்கியமான காரணம் யாது" என்று வினவி

[illegible]

யதின் கருத்தாவது:—நாம் காண்டற பிரமாணத்தால் அறியக்கூடிய காரணம் ஒன்று புலப்படுமாயின் அநாவசியகமாய்க் காணக்கூடாத மற்றோர் காரணத்தைக் கற்பித்தல் நியாயமுமன்று; அதனை நையாயிகரும் ஒப்பார். உதாரணமாக யாம் ஓர் குடத்தைக் கண்டபொழுது குயவனிலும் வேறான ஓர் கர்த்தா இருக்கவேண்டுமென்பது எமக்குத் தோன்றுதன்றே. பிராமாணிகராயுள்ளார் எவ்விதமும் காணுங்காரணங்களை விட்டுக் காணாக் காரணங்களைத்தேடார். ஆதலால் யாம் இப்பிரபஞ்சத்திற்குக் கர்த்தா ஒருவன் உண்டோவென ஆலோசிப்பதன் முன்னர் நாம் பொருள்களை ஆராயவேண்டும். ஆராயுங்கால், நாம் காணக்கூடிய காரிய வஸ்துக்களில் எவ்வஸ்துவுக்கு ஆக்குவோன் இவனெனக் காணப்படவில்லையோ ஆங்கு யாம் கண்ணுற்ற காரியங்களின் கர்த்தாவைப்போல் மற்றொரு கர்த்தா ஊகிக்கப்படுவனே யன்றி அவனிலும் வேறுதன்மை பெற்றவனாய் ஊகிக்கப்படான். உதாரணமாக உலகத்தில் குடத்தை ஆக்குவோன் ஆக்கையுள்ளவனென அறிந்த ஒருவன் ஓர் கடுங்கானகஞ்சென்று அங்கு ஓர் குடத்தை நோக்கலும் அதை ஆக்கியோன் ஆக்கையற்றவனென்ன ஊகிப்பானோ? ஊகியான். ஆயின், உலகத்திலுள்ள பொருள்களை ஆராய்ந்து இருவகைப்படுத்திச் சில இயற்கையில் தோன்றினவெனவும் சில ஆக்குவோனால் ஆக்கப்பட்டனவெனவும் கொண்டு அவற்றுள் ஆக்கப்பட்டனவற்றிற்கு ஆக்கியோன் ஒருவன் காணக்கூடியவனாகவே ஊகிக்கப்படுவான்; இயற்கையிற்றோன்றும் மற்றைப் பொருள்களுக்குக் கர்த்தா இல்லையெனவே ஊகிக்கலாம். இனி அணுக்களில் முன் நீர் எடுத்தோதிய வழி சேர்க்கை பிரிவுக்குக் காரணமாய் இரண்டு சக்திகள் காரணமாகக் கற்பித்தல் கூடாமையின் ஓர் கடவுளைக்கற்பித்தலே நியாயமெனின், அதே ஆக்ஷேபம் உமது மதத்தினும் வருமென்பதை அறியக்கடவீர். எவ்வனமெனில், பாகுபாடில்லாத அணுக்களின்கண் இரு சக்திகள் அமையாதாயின் அகண்டாகாரமாய்ப் பாகுபாடற்று நிற்கும் அப்பரம்பொருளுக்கு ஆக்கல் அளித்தல் அழித்தலென இம்முத்தொழில்கள் எவ்விதம் அமையும்? அது கடவுளுக்குக் குற்றமல்லவெனின், அணுக்கள் மட்டில் குற்றமாவதெப்படி? நித்தியனும் நிர்விகாரனுமான அப்பொருளிடம் அஃது குற்றமாகாதெனின், அணுக்களும் அத்தன்மை யுள்ளனவேயாதலால் அவற்றினும் அவை குற்றமாகா. அணுக்கள் விகாரமுறுவதால் அவையத்தன்மை பெறாவெனின் கடவுளும் உலகமாக விகாரித்தலல் அங்கும் அது சமமேயெனக் கண்டொழிவீராக. நம்மவருள் ஓர் பாலார் கடவுளே உலகமாய் விகாரிப்பதாய் ஒப்பினாரன்றே. இனி உலகத்தின் ஓர் கட்டுப்பாடு நிலைபெற வேண்டிக் கடவுளைக் கற்பிக்கின்றாமெனின், அவ்விஷயத்தில் எமக்கும் யாதும் தடையில்லை என்பதே.

இவ்விஷயங்களுக்குச் சமாதானங்கள் முன்னரே எடுத்துரைத்தோம். ஆயினும் அவைகளைச் சுருக்கி ஈண்டும் எழுதுவாம். அணுக்கள் ஓர் இடத்தால் அளவிடப்பட்டுத் தம்மைப் போன்ற மற்றைய அணுக்களை இயக்கும் ஆற்றலையுடையனவாயினும் அநேக அண்டங்களை இயக்கும் வலிமை அவற்றில் நிலைபெறா. அவ்வண்டங்களை இயக்கும் வலிமையும் அணுக்களின்கண்ணே நிலைபெற்றனவென முன்னெடுத்துரைத்தோம். இனி அணுக்களே உலககாரணங்களென வாதிக்கும் ஓர் ஆசி

[illegible]

ரியன் இவ்வாற்றல் தனிஅணுக்களின்கண் அமைந்ததல்ல; அணுக்கூட்டங்களின்கண்ணமைந்ததேயாமென வாதிப்பனேல் அவனை யாம் வினவுவதொன்றுண்டு: ஓ நாத்திகமணியே! நீர் படித்த புத்தகங்களில் சரீரத்தில் நாம் காணக்கூடிய பதார்த்தங்கினும் வேறாய் அவற்றை இயக்கும் வலிமைபெற்ற ஜீவனென்னும் ஓர் அணு உமக்குப்புலப்படவில்லையோ! அவ்வணு மற்றவற்றை அறியவும் இயக்கவும் மற்றவை அறியப்படவும் இயங்கவும் அமைந்தது யாதுபற்றியோ? என்பதே அம்மட்டிலும் ஒழியாது பின்னரும் கேட்கவெழின், வேறு சில காரணங்களையும் அவர்க்கு எடுத்துக்காட்டுவாம். உலகம் சேர்க்கை பிரிவு இரண்டிற்கு மிடமாதலாலும் அவ்விரண்டும் இருபொருள்களைப்பற்றி நிற்கும் இயல்பினவாதலாலும் அவை ஒழிதற்கு மற்றோர் அறிவின் செயல் வேண்டுவதல்லவா? ஆதலால், இஃதும் கடவுள் உண்மைக்கு ஓர் காரணமாமென்றறிக. உலகப்பொருள்களனைத்தும் ஜீவர்களின் உபயோகத்திற்காகவே சிருட்டிக்கப்பட்டனவாதலாலும் சரீரத்தின் உருபுகளும் அச்சரீரத்தின்கண்ணமைந்த ஜீவன் அடையவேண்டிய சுகதுக்கங்களுக்கெனவே அமைக்கப்பட்டிருத்தலாலும் அணுக்களுக்கும் இயக்கம் முதலியவை இடங்காலம் மாறாது தொடர்ந்து வருதலாலும் இவற்றிற்கு ஓர் அறிஞன் செயல் ஆவசியகமென்பதுண்மையாம். எமது சரீரத்தை நாம் ஓர்கால் ஆராயின் ஏதோ ஒரு அணுவென நன்றாகப் புலப்படும். தற்செயலாய்க் கூடியதாயின் எல்லாம் உபயோகமுள்ளனவாய்த்தான் இருக்கவேண்டுமென்பது அமையாதன்றோ. உலகத்தில் ஜடவஸ்துக்களாகிய கடம் முதலியவற்றைப்போல் இச்சரீரமும் ஜீவன் ஆண்டுகொள்ளவேண்டிய ஓர் பொருளேயெனின், அஃதெவ்வாற்றானுமமையாது. ஜீவனால் தொழிற்படுத்தப்படும் குடம் முதலியவற்றின் அமைப்புக் காலந்தோறும் வேறுபடுவதை நாம் பார்க்கின்றோம். இதோ எக்காலத்தும் வேறுபடுவதில்லை; வேறுபடுத்தவும் முடியாது. மேலும் உலகத்தில் எல்லாமனிதரையும் தனித்தனி பகுத்தறியும்படி அவர்கள் முகத்தில் ஓர் அடையாளம் இருக்கின்றது. பாருங்கள்! யாம் எவ்வளவோ காலங்களின் முன் கண்ட ஓர் மனிதனை மற்றோர் கூட்டத்திற் காண்போமாயின் அவனே இவனெனத் துணிகின்றோம். அவன் சரீரம் எம்போல் என்பு முதலியவற்றாலேயே அமைக்கப்பட்டிருப்பினும் முகத்தில் ஓர் வேற்றுமை தோன்றுதல் ஒருவருக்கொருவர் வேற்றுமை யறிந்து தம்மினமறிந்து கலந்து இவர்கள் சுகிக்கவேண்டுமெனக்கருதிய ஓர் அறிவுள்ளவன் செயலே இஃதென்பது உயர்ந்தோர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்கும். இனி எவ்வணுகாரணவாதியேனும் "அணுக்களெல்லாங் கூடி ஓர் வழி சேர்ந்தபடி மற்றோர்கால் சேர்வதில்லையென ஏற்படுத்திக்கொண்டன" என்பரோ! உலகத்தில் காரணம் இன்னதென அறியக்கூடாததாய் உண்டாகும் வஸ்துக்கள் ஒன்றுபோல் மற்றொன்றும் வேற்றுமையுள்ளதாயும் காணப்படுகின்றனவன்று. ஆதலால், ஒன்றை மற்றொன்றின் வேறென அறிவதால் எங்கு பயனுளதோ அங்கோர் விசேஷத்தைக் கடவுள் அமைக்கின்றார். ஆதலாற்றான் அநாத்திகர்களான நையாயிகர்களும் ஒன்றை ஒன்று வேறுபடும் பொருள் "விசேடம்" என்றார்கள். இனி நீரே சிறிது ஆராயின் நம் மதத்திற்றானே கடவுளை ஒப்புமாறு நேரிடும். எங்ஙனமெனில் நீர் அணுக்களின்கண் ஒப்பிய சத்தி குணமா, குணியா? குண

[illegible]

மாயின் தனதிடமாய அணுவை விட்டு மற்றோர் அணுவை நோக்கிச் செல்லாது. உலகத்தில் வெண்மையென்பது பண்பாயின் அஃது ஓர் ஆடையை விட்டு மற்றோராடையைச் செல்லக்கண்டோமா? ஆகையால், அஃது குணமன்றும். அஃது குணியாயின் அதேவிடத்தில் அது மாறுபாடெய்துவது உசிதமாகாதும். பாரும்! அணுவென்பது ஓர் குணி; அது அவ்விடத்திற்றானே நின்று திரிவதேயில்லை. இச்சத்தி என்பதோ? ஓர் சமயம் பாசத்தால் விருத்தியடையவும் ஓர் சமயம் குறையவும் ஓர்சமயம் இருந்தவிடம் தெரியாமல் ஒழியவும் நேரிடுவதால் அது ஒரு பொழுதும் குணியாவதில்லை. இனிக் குணமன்றிக் குணியுமன்றி மற்றொருவிதப் பொருளே சத்தி எனின் அதின் பெருமை விளக்கவும், மற்றப்பொருட்களை அது விளக்கவேண்டியும், அதில் அழியாத அறிவு ஒன்று ஒப்பநேரிடும். சேர்ந்தால் அதே பேராற்றல் எனப்படும். அதுதான் மூவகையாய் இச்சை, ஞானம், கிரியை எனப்படுகின்றது. அச்சத்தியையுடையவனே கடவுள். ஆதலாற்றான் சுவேதாசுவதர உபநிடதத்தில் "இவனது சத்தி யனந்தம். இயற்கையாய் அமைந்தது ஞானம், பலம், கிரியை" என்றுள. இங்கு "பலம்" என்பது இச்சையைப் பொருளாய்க்கொண்டு முடிகின்றது. முன்பின் சொற்களின் சம்பந்தத்தால் என்க. அதுகொண்டே சில ஆத்திகர்கள் கடவுளை பராசத்தி எனவும், பராசத்தியின் இடம் எனவும் சொல்லுகின்றார்கள். ஆகையால் முன்னெடுத்தோதிய தல காரணங்களால் ஓர் கடவுள் உண்டென்று ஏற்பட்டது. இனிச் சில பொருட்கள் இயற்கையில் உள்ளன சில தோன்றினவெனக் கொண்டு மகிழ்வதும் மணம்பெறுது என்பதை விளக்கவேண்டி ஓர் கேள்வியை எடுக்கின்றும். "இயற்கையிற்றோன்றினவற்றிற்கும் சேர்க்கையில் தோன்றினவற்றிற்கும் ஏதேனும் வேற்றுமை உண்டோ?" இதன் கருத்து. உலகம் இருவகைப்பட்டமையால் எவ்வெப்பொருள் எவ்விதம் காணப்படுமோ அவ்வப்பொருள் என்றும் அம்மாதிரியே இருக்கும். அதற்குக் கடவுள் வேண்டுவதில்லை என்பதே. இதை இவ்விதம் கூறி மறுக்க. இருவகைப் பொருள்கள் உண்டென்பது எமக்கும் உடன்பாடே. ஆயினும் இருவகைப் பொருட்களுக்கும் ஒரு ஆக்குவோன் உண்டென்போம். எங்ஙனம் எனில் இருவகை வத்துக்களையும் உண்டாக்கப் பார்க்கின்றோம். அவற்றை ரசாயன சாத்திரிகள் சோதித்து இவ்விதப்பொருள் சேர்ந்து இதிது உண்டாயிற்றெனத் துணிகின்றார்கள். அவற்றைப் பிரித்தும் காட்டுகின்றார்கள். இங்ஙனமிருக்கச் செய்யக்கூடிய பதார்த்தத்தை மட்டில் செய்து முடிக்கவும். மற்றவை உண்டாயிருந்தால் சோதித்து அதில் சேர்ந்த பொருட்கள் இவையென்றும் நிச்சயிக்கவே இவர் அறிதலின்றி ஒரு வாணையிலையைச் செய்யச் சொன்னால் செய்வாரா? ஆயின் இயற்கையில் அமைந்த வத்துவை ஒழிக்கவும் செய்கையில் அமைவற்றதை ஆக்க அளிக்க அழிக்கவும் எமக்குப்பேராற்றலுண்டாம். எதை யாவன் ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும் "எவ்வித்தத்தாலும் ஆற்றல் பெற்றான் அவனே அதற்குக் கர்த்தா. ஆதலால் உலகத்திற்கு ஏற்ற இம்மூத்தொழில்களையும் நடாத்தும் நாதன் ஒருவன்வேண்டும் என்பது துணிபு. இனிமேல் வரும் கேழ்வியின். ஈசுவரன் உண்டென்று ஒப்பி மறுபடி அவ்வித ஆத்திக வாதத்தைஎவ்விதமாவது கெடுக்கக்கருதிக்கேட்குங்கேழ்விகளையிந்

[illegible]

[illegible]

—:0:—

[illegible]

[illegible]

லால் அவைகளை மறுக்குமிடத்து (தன் முகத்தைக் காக்க வலியற்று மற்றதில் குற்றம் கூறுவதே தொழிலாய் வெளிவந்த நாத்திகப் பதர்களைத் தொலைக்கு மிடமாதலால்) ஈசுவரன் உண்டென்பதை மறக்காது மனதில் நிறுத்துக. அக்கேள்விகளுள் சில எல்லா ஆத்திகர்களை நோக்கியும் சிற்சில ஆந்திகர்களை நோக்கியும் எழுந்தன. ஆகையால் யாம் இருவகைக் கேள்விகளையும் யுக்திகளாற் கண்டித்துவிடுவோம். அது விஷயத்தில் நமது சுதேச வித்துவான்களுக்கும் சிறிது சொல்லவேண்டும். அக்கேள்விகளை முறையே எடுத்துவிரித்து மறுப்பாம். அவற்றுள் முன்னுள்ளவை இவை "ஜீவன் உலகாம்சத்தை உண்டாக்க யாம் காண்டலால் ஏன் உலகம் அனேகரால் சிருஷ்டிக்கப்படாது?" "ஒரு கடவுள் இருப்பின் ஏன் தாரதம்மிய சிருஷ்டி செய்கிறான்" என்று. இவற்றுள் முந்தியது முன்னே பத்தாவது கேள்வியைப் பற்றி விசாரித்து அனேகேசுரவாதத்தை மறுக்குமிடத்தே மறுக்கப்பட்டது. மறுபடி எழுதிற் பெருகும். மற்றதை விரித்துப் பின் மறுப்பாம்.

வரும்.

விக்கிரகாராதனம்.

(அனுபந்தம்.)

—:0:—

ஐய! முற்கூறிய காரணங்களாற்றான் வியாகரண பாடியத்தில் ஸ்ரீமத் ஆசிரியர் பதஞ்சலியார் "வேதங்களில்" என்று தொடங்கி விதிக்கப்பட்ட "தவை" முதலிய விகுதிகளுக்கு மந்திரமல்லாத பிராமணங்களிலும் உதாரணம் காட்டுகின்றார். ஆதலால் பதஞ்சலியார் கருத்து "வேதம் என்பது மந்திரம் பிராமணம் இரண்டும் சேர்ந்ததே" என்பது. ஆசையாற்றான் அவ்வாசிரியரே மர்பாடியத்தின்கண்ணே "பஸ்பசை" என்னும் பிரகரணத்தில் "தேசுராஹெலயோஹெலய" என்று ஓர் வசனத்தை எடுத்து இது வேதம் என்றார். அது பிராமணம். அதை வேதம் என்று சொல்வதால் ஆசிரியர் கருத்து நன்கு வெளிபாயிற்றல்லவா? இதே வேதவாக்கிய சுக்கில் யஜுர்வேதத்தைச்சார்ந்த "சதபத" மென்னும் பிராமணத்தில் இருப்பதாய் வையாகரண குலதிலகராகிய ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதர் அவர்கள் "சத்தகௌஸ்துபத்தில்" எடுத்துரைத்தார். அதேவாக்கியத்தில் "மிலேச்சிதவை" என்ற ஒருசொல்லிருக்கின்றது. அதில் "தவை" என்னும் வேதத்திற்றான் விநியோகிக்கலாம் அஃதிருத்தலும் பிராமணம் வேதம் என்பதற்கு ஓர் சான்றாகும். இனி மந்திரங்களே வேதங்களாயின் வேதங்களுக்குக் கூறிய விலக்கணம் எங்கும் வேதத்தில் சொல்லும். ஆகலின் அவற்றில் சில விதிகள் மந்திரங்களின் மட்டில் இருப்பதற்காக "மந்திரங்களில் இது" என்று தனித்தெடுத்தோதும் ஆசிரியர் பாணினியாரும் அதை அனுசரித்து உரை செய்யும் உரையாசிரியராகிய பதஞ்சலி மாமுனிவரும் அறிவிலராவரன்றே? ஆதல்கொண்டே ஆசிரியர் ஜைமினியார் "எடுத்தோதப்படாதவை மந்திரங்களல்ல" என்று ஊகம் முதலியவற்றை வேதமல்லவெனக் கூறினர். இனிப் பெரியோர் சிலர் வேதங்களைப் பொதுவில் மந்திரங்களெனவும் சொல்வார்கள். இங்ஙனமிருக்க நமது ஆரியசமாஜத்தார் விக்கிரகாராதனம் வைதிகமன்றெனக்கூறத்துணிந்தது யாதுபற்றியோவெனின், ஆரியர்களாகிய

[illegible]

நம்மவர்கள் வேதங்களையும் வேதாங்கங்களையும் சற்றுணராதிருக்கக்கண்டு அவர்களை ஒரு வழி மயக்க எண்ணியே அங்ஙனமெழுதினாரென்றுணர்க. இனி இறுதியில் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை மரியாதைக்காக எடுத்து முறையே மறுக்கின்றோம். அவையாவன:—1. "இவ்விஷயத்தில் எடுத்துக்காட்டும் பிரமாணங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுடைய சங்கிதைகளின் மந்திரங்களாகவே இருத்தல்வேண்டும்." 2. "மந்திரங்களைப் பொருட்படுத்தத் துணைக்கருவியாய்க் கொள்ளற்பாலன நிருத்தம், நிகண்டு, சநிபதம், கோபதர், ஐதரேயம், சாமவிதானம், அஷ்டாத்தியாயி, மகாபாஷ்யம் இவைகளே" 3. "நமது முன்னோர் எழுதிய ஆறு சாத்திரங்களில் அகப்பட்டவைகளே யுக்திக்கொப்பத்தக்கவை" என்பனவாம். இவற்றிற்கு முறையே மறுமொழி கூறுவாம். ஐயா! இவர் எழுதியதை அனுசரித்தே யாம் இதுவரையில் சங்கிதைகளில் உள்ள மந்திரங்களையே பிரமாணங்களாக எடுத்துக்காட்டினோம். அவ்விதம் காட்டினதால இவர் மந்திரங்களன்றி மற்றவை அப்பிரமாணமெனக் கொண்டதுபோல நாமும் கொண்டிலேம். மற்றெவ்விதமேனும இவர் அகமகிழ்வாரென்றே அங்ஙனம் எழுதப்பட்டது. ஆதலாற்றான் விதிகளையும் அர்த்தவாதங்களையும் உபநிடதங்களிலுள்ள மந்திரங்களையும் ஒழித்து இவர் ஒப்பியவாறே எடுத்துப் பிரமாணங்களைக் காட்டிவிட்டோம். இனி மற்றவையும பிரமாணமாகும் வழிகளைப்பற்றிப் பின்னர் எடுத்து எழுதுவாம். முடிவில் நமது பக்ஷத்திற்கு வேண்டிய யுக்திகளும் எடுத்தோதப்படும். இனி உண்ணோக்கமாய் இவர் வார்த்தையை விசாரிப்போமாயின் இவர் சங்கிதைகளையும் முற்றிலும் நம்பாதவரெனப் புலப்படும்.

எங்ஙனமெனில், சங்கிதைகளில் மந்திரங்களே பிரமாணங்களென்பது இவர் கொள்கை. உபநிடதங்கள் வேதங்களல்லவாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் சங்கிதைகளில் மந்திரங்களே பிரமாணங்களாகக் கொள்ளத்தக்கன. அவற்றுள்ளும் எத்தேசத்திலும் படிக்கப்பட்டனவே பிரமாணமென்கின்றார். இதனால் இக்காலத்தில் அதர்வணவேதம் விசேஷமாகப் படிக்கப்படாமையால் அது அப்பிரசித்தமென்று அதை ஒதுக்கலாம். சாமவேதமோ இருக்குவேத மந்திரங்களைக்கொண்டு பண்ணிசை பூட்டப்பட்டனவாதலால் அது அதிலும் வேறன்று என்று கொண்டு அதனையும் ஒழிக்கலாம். யசுர்வேதத்திலும் மந்திரங்களே பிரமாணமெனில் அம்மந்திரங்கள் இருக்குவேதத்திலும் உள்ளனவாதலால் இருக்குவேதம் ஒன்றே பிரமாணமென ஏற்பட்டது. இவ்வித அபிப்பிராயம் மேற்றிசையில் உள்ள மாக்ஸ்மில்லர் முதலாயினோர் கொண்டதேயன்றி நம்மவருள் எந்நூலாசிரியரும் கொண்டதல்ல. அவ்வபிப்பிராயங்களைத் தாம் உள்ளமைத்து இவர் இவ்விதம் வரைந்தார். அவ்வபிப்பிராயம் அவ்வளவு உசிதமன்றென்பதைப்பற்றி "வைதிக வர்ண லக்ஷணம்" என்னும் கிரந்தத்தில் யாம் விரித்தெழுதியிருத்தலால், அதனை ஆண்டுக்காண்க. மேலும் இவர் எழுதுவது எமக்கோர் ஆறுத்துயரைத் தருகின்றது. "நான்கு வர்ணங்கள், மூன்றுலோகங்கள், நான்கு ஆசிரமங்கள், மூன்று காலங்கள் இவையெல்லாம் வேதங்களாற்றான் சித்திக்கின்றன" என்று சகல தர்ம

[illegible]

சாஸ்திரகாரர்க்கும் முதல்வரும் ஆரியகுலத்தின் முதலாசிரியரும் சகலவேதங்களின் கருத்தையுமறிந்தவரான ஆரியரால் புகழப்பெற்றவருமான மனு எடுத்தோதினராகவும், "வேதத்திற் கண்ட விதிகள் கொண்டு இலிங்கத்தின்கண் கடவுளைப் பூசித்தல் சாலவும் நன்று" என்று ஆரியமத பரமாசாரியரான வாதராயணாசாரியர் கூறியிருக்கவும், ஸ்ரீவேதாந்த சூத்திரபாஷ்யத்தில் தேவதா அதிகரணத்தில் ஸ்ரீமத்பகவத்பாத சங்கராசாரிய சுவாமிகளவர்கள் "சதுர்வர்ணங்கள் முதலியன வேதங்களாற்றான் வெளிவந்தன" வென ஓதவும் இவைகளையெல்லாம் ஆதரிக்காது ஏதோ மேற்றிசையிற்றோன்றிய சில அவைதிகர்கள் எழுதிய சில வாக்கியங்களை உண்மையெனக்கொண்டு புறமதவாசனுபிசாசம் ஆவேசிக்க முன் பின் விரோதமாய் முழுக்குளறுபாடாய் எழுதி மூதறிஞர்களையும் கடிந்து பேசுகின்றனரென்பதே. இனி இவர் இவ்விஷயங்களை எழுதியதும் வேதங்களைப் பிரமாணமெனக்கொண்டு எழுதினரில்லை. பின்னை யாதுபற்றியோவெனின், நம்மவர்க்கு வேதத்திலுள்ள பற்றை எவ்விதத்திலேனும் ஒழித்துவிடவேண்டுமென்றே வேதங்களில் சில பிரமாணங்களென்றும் சில அப்பிரமாணங்களென்றும் ஏதேதோ தோன்றியவாறு எழுதிவருகின்றனர். இதனால் பிம்பாராதனம் அவைதிகமென எவ்வாற்றானும் சாதித்தலமையாது. மேலும், இவர் நமது தேசத்திற் சற்பசூத்திரங்களியற்றிய போதாயனர் முதலிய மாமுனிவர்கள் எடுத்துக்காட்டிய மந்திரங்களையும் அப்பிரமாணங்களென்றே கொள்கின்றனர். ஆதலால் இஃது வைதிகர்களை ஏமாற்றும் ஒரு வழியே. இனி எவனேனும் இவரெடுத்தவழியிலும் நின்று விக்கிரகாராதனத்தை ஸ்தாபிக்கமுயல்வானெனின் அவனுக்கும் ஒரு வழி எடுத்து மறுக்கவேண்டுமென்றெண்ணி இதன் அடுத்த விஷயத்தை எழுதினர்போலும்! அதாவது முன்னெடுத்துக்காட்டிய விஷயங்கள் மூன்றில் இரண்டாவது "மந்திரங்களைப் பொருட்படுத்துவதில் சிற்சில பிராமணங்களும் சில நிருத்தம் முதலிய வேதாங்கங்களுமே" என்பது. இவர் சொல்லும் இவ்வழியையும்பற்றி நாம் முன் வேதங்களுக்காகச் சொல்லிய நியாயங்களை மனதில் வைத்துச் சாமவிதானம், சதபதம், அஷ்டாத்தியாயி, மகாபாஷ்யம் முதலியவற்றைக்கொண்டே விக்கிரகாராதனத்தை வேதங்களினின்று எடுத்து ஸ்தாபித்தோம். இவர் எழுதும் விஷயங்களைப்பற்றி மாத்திரம் ஒன்றும் கேட்கலாகாது. சொன்னதைச் சரியென்று ஒப்பவேண்டும். மேற்றிசையார் எழுதும் ஒவ்வொருவரிகளும் ஆப்த உபதேசமாய்க் கொள்ளவேண்டும். இதுவே இவர் கொள்கை. இனிப் பிராமணங்களுக்குள் கோபதப்பிராமணம், சதபதப் பிராமணம், சாமவிதானப்பிராமணம் இவைகளே பிரமாணங்களென்றும் மற்றைப் பிராமணங்கள் அப்பிரமாணங்களென்றும் சொல்வது எப்பிரமாணங்கொண்டோ ! வேதங்களைப் பொருட்படுத்துவதில் வேதங்களின் ஆறு அங்கங்களுள் நிருத்தம் வியாகரணம் இவ்விரண்டே பிரமாணங்களென இவர்க்கு யாருரைத்தாரோ! அவ்விஷயத்தில் இவர் எப்பிரமாணத்தைக் கண்டாரோ! வேதங்களுமல்லாது வேதாங்கங்களுமல்லாது நிகண்டைப் பிரமாணமெனவுங் கொண்டார். இதற்குத்தான் காரணம் யாதோ! இனி இவைகளை ஆராயுங்கால் மேற்றிசையிலுதித்த வித்துவான்கள் "இவர் மேற்காட்டிய சில பிராமணங்கள் சில வே

[illegible]

தாங்கள் நிகண்டு இவை பண்டைக்காலத்தே தோன்றின மற்றைய பிற்காலத்துத் தோன்றின என்று சொல்லுகின்றார்கள்” என்று சமாதானமளிப்பாரோ, அல்லது மற்றவையும் பிரமாணமென ஒப்பின் இவ்வைதிக பிம்பாராதனத்தை ஒப்பும்படி நேரிடும் என்பாரோ அறியோம்! ஏனெனில், போதாயனமுனிவர் தாமெழுதியகற்பசூத்திரத்தின்கண் “இனி மஹாதேவன், மஹாபுருஷன் இவர்களின் நித்திய பூசையை எடுத்தோதுவாம்” என்று தொடங்கி ஸ்பஷ்டமாய்ச் சிவபூசையையும் விஷ்ணு பூசையையும் முறையே எடுத்துக்கூறினர். சோதிடத்திலும் பிம்பப்பிரதிட்டை செய்யுங் காலங்களிருக்கின்றன. ஆதலால், இவர் தமக்கு வேண்டியதாய் எடுத்தோதிய புத்தகங்கள் தவிர மற்றை எல்லாச் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களும் விக்கிரகாராதனத்தைக் காட்டுகின்றன வென்பது தானே வெளிப்பட்டது. இனி உபநிடதங்களில் ஐதிரேயம் ஒன்றே பிரமாணமென இவர் கூறுகின்றார். அதற்குக் காரணம் மேற்றிசையார் கூறியபடி ருக்குவேதம் ஒன்றிலுள்ள நம்பிக்கையும் அவ்வுபநிடதத்தில் பிம்பாராதனத்தைப்பற்றி பாதம் சொல்லாதிருத்தலுமே. மேலும், வடநாடுகளில் இருக்கு வேதிகள் அநேகர். மற்றவருள் சுக்கில யசுர்வேதிகளும் சாமவேதிகளும் அநேகரிருக்கின்றார்கள். கிருஷ்ணயஜுர்வேதத்தைக் கையாடுபவர் சிலரே. அவருள்ளும் ஆபஸ்தம்ப சூத்திரத்தவர் அகப்படுவது மிகவரிது. கௌடர் மகாராஷ்டிரர் இவர்களுக்குள் கிருட்டின யஜுர்வேதத்தவர் பெரும்பான்மையில் இரண்ணிய கேசசூத்திரத்தைக்கைக்கொண்டவர்கள். மற்றவர் ஆஸ்வலாயனர், போதாயனர், காத்தியாயனர், த்ராஹியாயனர் இவர்கள்சூத்திரத்தைக்கைக்கொண்டவரே. ஆதலாற்றான் யஜுர்வேதத்தைப்பொருட்படுத்தவேடி ஓர் பிராமணங்களையும் எடுத்தோதினரில்லை. அவ்விதம் ஒரு வேதபாகமிருப்பதாய்இவர்அறிந்திருப்பின் அதில்ஸ்ரீருத்திரம் முதலிய பல பாகங்களிருத்தலாலும் அவற்றுள் பிம்பாராதனம் தெளிவாயெடுத்துரைக்கப்பட்டமையானும் அவற்றை ஒழிக்கவேண்டி முன்பின் சம்பந்தமின்றிக் கிருஷ்ண யசுர்வேதத்தைப் பொருட்படுத்தப் பிராதி சாக்கியம் அல்லது வேறேதேனும் ஒன்றே பிரமாணம் என்று சொல்லியிருப்பார். அவர் அங்ஙனம் சொல்லாமையால் அத்தேசத்தில் தைத்திரீயம் என்னும் சங்கிதை வழக்கமில்லையோ! அல்லது அதைப் பிரமாணமென்று இவர் எண்ணினரில்லையோ! ஏனெனில், இக்கலிமாந்தருட் சிலர் கிருஷ்ண யசுர்வேதம் சுத்தமல்லவென்றும் சுக்கில யசுர்வேதமே சுத்தமென்றும் அதே வேதத்தை யாஞ்ஞவல்கிய மாமுனிவர் சூரியபகவானிடம் படித்துணர்ந்தவொன்றும் அவையே பிரமாணங்களென்றும் மற்றைக் கிருட்டினயசுர்வேதத்தில் பின்வந்தவரால் சேர்க்கப்பட்ட வசனங்கள் பல இருக்கின்றனவென்றும் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வாதம் அவ்வளவு உசிதமானதல்ல. ஏனெனில், ஆதிகாலத்தில் சுக்கில யசுர்வேதம் ஒன்றே உளதாயினும் காலத்தால் மற்றைய வேதங்களின் வாக்கியங்கள் அதிற் கலந்து நிற்க அவ்வேதங்களைப் பகுத்தருளுமாறே திருவவதாரஞ்செய்த வேதவியாசமாமுனிவர் உபயோகமுள்ளதும் உசிதமானதுமான,மற்றைய வேதமந்திரங்களிற் சிலவற்றையுங் கலந்து கிருட்டின யசுர்வேதத்தை வெளியிட்டாராதலால் அதை அப்பிரமாணமெனச் சொல்லுதல் எவ்வாற்றானுமியையாது. இனி இவ்வித

[illegible]

கிருஷ்ண யசுர்வேதம் போதாயனர் முதலிய மகரிஷிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டபடியால் அவற்றை அப்பிரமாணமெனக்கோடல் ஆரியர்களின் வாதமாகாது. இவ்விதம் செல்லும் இவர்க்குத் தம்மட்டிற்றானும் பிரமாணமாவதுதான் எப்படியோ அறியோம். அவர் கொண்ட வழியெல்லாம் நின்று அவர் கேட்ட கேள்விகளுக்கு நாம் விடையளித்திருப்பினும் உண்மையை மட்டும் விளக்கி இவ்விஷயத்தை மறுத்தாம். இனி அவர் "யுக்திப் பிரமாணங்களும் நம்மவரால் எழுதப்பட்ட ஆறு சாத்திரங்களுள் உள்ளவையே கொள்ளற்பாலன" வென்று எழுதியதும் நம்மை நோக்கியேயன்றித் தம்மைநோக்கியல்ல. எவ்வாறெனில் இவர் வேதாந்த சாத்திரத்தின் முதலாசிரியராகிய வாதராயண முனிவர் திருவாக்கையும் பூர்வமீமாஞ்சையின் ஆதிகர்த்தராகிய ஜைமினிமுனிவருடைய திருவாக்கையும் சோதிடம் வைத்தியம் முதலியவற்றையும் ஒப்பினரில்லை. இவ்வித காரணங்களால் இவர் நம்மவரை ஏமாற்றவே ஓர் வழி எடுத்தாரென்பது எல்லோர்க்கும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்கும். இனி நம்மவர் பொருளாசைகொண்டு ஏதேனும் எழுதுவாரென்று தமக்குத் தோன்றியவாறு எழுதிவைத்தார். நாம் அவற்றிற்கு விடையளிக்கவேண்டிய அவசியமில்லை. எமக்கு வேதத்தையும் வைதிகர்களையும் நிந்திக்கும் இவர் பொருள் வேண்டியதுமில்லை. ஏனெனில், எமது ஆசாரியன் எமக்கிட்ட ஆணை யாதெனில் "தன் தொழிலைக்கொண்டு தான் அடையும் பொருளால் தன் மனம் களிக்கச் செய்தல் வேண்டும்" என்பதே. இவ்வளவு ஆடம்பரங்களுடன் இவ்வாரிய சமாஜத்தார் கேள்விகளுக்கு விடையளிக்கப்பட்டன. முன் நாம் எழுதிவரும் இடத்தில் விக்கிரகாராதன மாகாத்மியத்தைப்பற்றிப் பின் எழுதுவாமென்று எழுதியிருக்கின்றோம். அதைப்பற்றி மற்றோரிடத்தெழுதுவாம். இவர் இறுதியில் எழுதிய விஷயத்தைக் கவனித்தால் இவர் உள்ளம் யாவர்க்கும் இனிதுவிளங்கும். அதாவது: "ஆறுமாசகாலங்களுள் கல்லைக் கடவுளென்று கும்பிடுதல் சித்திக்காவிடில் இத்தேசத்தவர் அனுட்டிக்கும் கல்லைத்தொழுதல் அவைதிகமென்றேற்படும்" என்பது. பாருங்கள்! கல்முதலியவற்றைக் கடவுளென்றே பாவித்துக் கும்பிடுதல் எமது தேசத்துக்கு நெடுங்காலமாக ஏற்பட்ட வழக்கமே. அது புதிதாய் ஏற்பட வேண்டில் இவர் காலத்தைக் குறிக்கவேண்டும். நிற்க. இவர் எழுதிய கடிதம் குறித்தகாலத்துள் அறிஞரிடம் அணுகாமை விடினும், இவரோ அச்சிட்ட கடிதத்தை அடக்கத்தில் சிறிதுகாலம் வைத்திருந்திருப்பினும், அநாதிகாலமாய் வைதிகமென்று நம்மவர் கொண்டாடும் இவ்விக்கிரகாராதனம் அவைதிகமாய் விடுமோ! இஃது ஓர் கொக்குப் பிடிக்கும் வித்தையேயாம். மற்றது பிற்பாகத்திற்காண்க. முற்பாகம் முற்றிற்று. சுபம்.

சம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

(முன்தொடர்பு.)

இனி நாம் ஆராயுங்காலத்து அக்னிகேசபட்டர் எழுதியகிரந்தங்களுள் முன்னையது மந்த்ரூஷை என்றே ஏற்படுகின்றது.

ஸமோஹா யதிநிப கிகாராவமேவ நக்ஷத்ரவிவாவிதாநு ஜாநீயாத். அயமேவாஸ்மத்ஸூத்ராத்ப்ராஹமேவ, கிய த்கம் விசாரணா நிக்ஷிப்தநாவதாவாமேவிக்ஷிதம் க ரிதம் ஸமேவிக்ஷவிஷ்ருதி உடிதேகம் பகுபம்ய நிதம் யநம் வர்த்ருகஜதி ஸ்வல்பம் ஶிவம்.

ஸுப்ரஹ்மண்யஶாஸ்த்ரீ;

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரி-

வ்யாகரணஸந்தேஹ:

ஸ்வஸ்தி!

ஸ்ரீமதே விதுஷே! தத்ரவிஶேஷேஷு க்ரந்தேஷு வ்யாகரணம் மஞ்ஜூஷாயாஸ்ஸர்வ யத: தஸ்யாம் நாந்யஸ்ய க்ரந்தஸ்ய நாமோத்கரணம் யதிஶேஷே வ்யாப காரஸ்ய க்ரந்தஸ்ய நாமோத்கரணம் ச. ததா ப்ரதீபோத்யோத ஸ்தலே யத்ர மஞ்ஜூஷா நாமோத்கரணம் ஶப்தேந்துஶேகரே நாமோத்கரணம். தத்ர ஶப்தேந்துஶேகரே மஞ்ஜூஷாப்ரதீபோத்யோதயோர் நாமோத்கரணம். தத: பரிபாஷேந்துஶேகர:. யத்ர ஸர்வேஷாம் க்ரந்தானாம் ஶப்தேந்துஶேகரஸ்ய நாமோத்கரணாதேவ ஐகஶ்ருத்யவாதஸ்ய. மஞ்ஜூஷாயா: ஸர்வஸ்ய ப்ரதீபோத்யோதாது. யத்ர ப்ரதீபோத்யோதே ஐகஶ்ருத்யவாதோ யதே. ஸம்ஜாயதே ஸந்தேஹ: மஞ்ஜூஷாயா: ஐகஶ்ருத்யவாதஸ்ய ச. லகுமஞ்ஜூஷாயாம். தஶஸஹஸ்ர (10000) க்ரந்தஸங்க்யா. பரமலகுமஞ்ஜூஷாயா: பஞ்சஶத (500) ப்ரதீபோத்யோதஸ்ய க்ரந்தஸங்க்யா ஷட்த்ரிம்ஶத்ஸஹஸ்ராணாம் (36000) ஶப்தேந்துஶேகரஸ்ய. ஸஹஸ்ராண்யஷ்டாதஶ (18000) பரிபாஷேந்துஶேகரஸ்ய ஸஹஸ்ரக்ரந்தஸங்க்யா: (1000) ஐகஶ்ருத்யவாதஸ்ய. க்ரந்தத: த்ரிஸஹஸ்ர (3000) ஸங்க்யாகதிஶ்ருதி:. ஶ்ருதம் தத்கீயா: க்ரந்தா: ஸர்வ ஸங்க்யயா (68000) தத்ர விஶிஷ்டாதரோ நிவேஶ: மஞ்ஜூஷாஶப்தேந்துஶேகரயோ: அதவ ஏவ தவ மனோ: ஶப்தேந்துஶேகரஸ்ய: புத்ரோ மஞ்ஜூஷா புத்ரிகா! லோகேஶ்வரஸ்ய ஶிவஸ்யார்ப்பிதாயோ॥ இதி க்ரந்தாந்தே ஶ்லோகமேகாதிமாவிஷ்ருதம். அத்ர வாதத்ரய. உபக்ரமேஷு க்ரந்தானாம். ஸாம்பஶிவம் ப்ரஹ்மதத்வம் நிர்திஶதோ ஸ்வாமினஸ்ய ஸத்ஸம்ப்ரதாய வ்யாஜேன ஸ்வமதவ்யஞ்ஜனம் தவ்யக்ஷாவகாஶம். மஞ்ஜூஷாயாம் ஸத்கார்யவாதவ்யாகரணே நிவர்த்தகம் வா வ்யாகரணே ச. விவர்த்தவாதஜமநிஷ்ப்ரயோகவாதிமேதவாத நிராகரணாதேதத்ஸ்ஸ்வாகாரம் க்ஷாதேயஸ்ய தக்ஷாதேதத்ஷாம் ஸ்வயோ: ஹி நிவேஶ: ஸ்ரீமத்

எவ்வாறெனில் அப்புத்தகத்தின்கண் மற்றைய புத்தகங்களைப்பற்றி ஒன்றும் எழுதவேயில்லை. மற்றைய புத்தகங்களிலோ அதைக்குறித்துப் பலவிடங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. அதற்கு அடுத்தது பாடியப்பிரதீபோத்யோதம் என்பது. அதில் மஞ்சூஷையின் பெயரன்றிப் பிறவற்றின் பெயர் இல்லை. அதற்கடுத்தது சப்தேந்துசேகரம் என்னும் புத்தகம். அப்புத்தகத்தில் மேலைய இரண்டு புத்தகங்களின் பெயரும் இருக்கின்றன. பரிபாஷேந்துசேகரம் என்னும் புத்தகத்தில் மற்றை எல்லாப் புத்தகங்களிலுள்ள விஷயங்களுமிருத்தலால் அஃது அவை யெல்லாவற்றிற்கும் பிந்தியதே. ஐகசுருத்திய வாதம் என்னும் புத்தகம் பாடியப்பிரதீபோத்யோதத்தில் ஓரிடம் குறிக்கப்படுகிறபடியால் இது அதற்கு மூந்தியதென்று மட்டில் அறியக்கூடியதாயிருக்கின்றதன்றி மற்றைய புத்தகங்களுக்குப் பிந்தியதோ மூந்தியதோவென்று அறியத்தக்கதாயில்லை. இவற்றுள் லகுமஞ்சூஷை என்பது 10000-கிரந்த சங்கியையுள்ளது. பரமலகுமஞ்சூஷை என்பது 500 கிரந்தங்களுள்ளது. பாடியப்பிரதீபோத்யோதம் 36000 கிரந்த சங்கியையுள்ளது. சப்தேந்துசேகரமென்பது 18000-கிரந்தங்களுள்ளது. பரிபாஷேந்துசேகரம் 1000-கிரந்தங்களுள்ளது. ஐகசுருத்தியவாதம் என்பது 3000-கிரந்த சங்கியையுள்ளதெனக் கேள்வி. ஆக அவர் எழுதிய கிரந்தங்களின் உத்தேச சங்கியை 68000-மாம். அவருக்கு மிக்க அபிமானம் மஞ்சூஷையிலும் சப்தேந்துசேகரத்திலும்தான். அதனாற்றான் அவர் "சப்தேந்துசேகரம் புத்திரன். மஞ்சூஷை என்பது பெண். இவ்விருவரையும் மகிழ்ப்பெற்று மலைமங்கை மணவாளனுக்கு அர்ப்பித்தேன்" என்று தாம் எழுதிய புத்தகமுடிவில் எழுதியிருக்கின்றார். இவர் ஒவ்வோர் நூலின் தொடக்கத்திலும் சாம்பசிவனே பிரமவஸ்துவென்று குறிப்பிடுகின்றாராதலால் இவர் சிவஞானச் செல்வரென வெளிபாகின்றது. அதுமட்டோ, இவர் எழுதிய மஞ்சூஷா கிரந்தத்திலுள்ள சத்தப்பிரமவாதப் பிரகரணத்தில் விவர்த்தவாதத்தை ஒப்பியதாலும் உலகம் மித்தை (அநிர்வசனீயம்) எனத்தாபித்ததனாலும் நிபாதார்த்தவாதப் பிரகரணத்தில் வேற்றுமையென்பது பொருளல்லவென ஒழித்ததாலும் இவரது திருவுள்ளம் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியாது மதத்தையே பற்றி நிற்கின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளக்கும். இவர் அவ்வேதாந்த பரமாசாரியரது பாடியகாரரபிப்பிராயத்தை அநுசரித்தவராயினும் பஞ்சபாதிகாகாரர் முதலிய வழிநூலாசிரியர் சித்தாந்தங்களைக் கண்டிக்கின்றார். அங்ஙனம் உபவருஷாசாரியர் கண்டித்த சப்தகாரணவாதத்தை நிலைநாட்டுகின்றார். ஆகலால் பத்திரகிரியைப்போல் இவர் ஓர் அத்வைதியும் சப்தகாரணவாதியும் என்று ஏற்படுகின்றது. இவர் எழுதிய புத்தகங்கள் மற்றைய சாத்திரங்களில் அநேகங்களிருப்பதாய் ஏற்படுகின்றது. அவற்றுள் காவிய இலக்கணத்தில் ரசகெங்காதரன் என்னுங் கிரந்தத்திற்கு இவர் எழுதிய வியாக்கியானம் ஒன்று. காவிய இலக்கணங்களைக் குறித்து எழுதுமிடத்து அதன் சொரூபத்தை எழுதுவாம். இவர் பத்திரகிரியின் கொள்கையை மறுபடி நிலைநாட்டினவர். உண்மையறியாதவர் அவர் எழுதியது புதுக்கொள்கை யென்பார்கள். மாபாடியம் வாக்கியபதீயம் இவ்விரண்டனுளில்லாத விஷயங்கள் ஒன்றையும் அவர் எழுதி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஞரில்லை. மாபாடியகாரர் உள்ளமறியாதார் எழுதிய குளறுபாடுகளை ஒழித்து உண்மையை விளக்கியதே இவரது செயல். ஆதலாற்றான் தம் கொள்கைகளுக்கு மூலமாக எங்கும் மாபாடியத்தையும் வாக்கியபதீயத்தையுமே எழுதியிருக்கின்றார். இவருக்கு அம்மும்முனிவர்கள் வார்த்தைகளில் மிகுந்த நம்பிக்கை. இவர் எழுதிய புத்தகங்களில் "மற்றவர் கூறுகின்றார்" என்று எடுப்பது இவர் சுவ அபிப்பிராயமென்பது கற்றவர் கூற்று. வியாகரணத்தில் பழையது புதியதென்பதால் இலக்கியம் வேற்றுமையடையாது. இலக்கணங்களைப் பொருட்படுத்துவதுமட்டில் வேறுபட்டிருக்கும். பழைய புத்தகத்தில் ராம: என்று இலக்கிய மிருந்தால் புதுப்புத்தகத்தில் அது வேறுவதில்லை. மஞ்சூஷை என்னும் புத்தகம் வெகு விஷயங்களை உடைத்தானது. அதைப் படிப்போர் மிக அரியர். அதைப் படிப்பிக்கத்தக்கோரும் இந்நாட்டிற் சிலரேயுளர். அவர் புத்தகங்களைப் படித்துப் பார்த்தால் ஆசிரியர் பதஞ்சலியாரது உண்மைக்கருத்து இன்னதென்று நன்றாய் விளங்கும். இவர் கிரந்தங்களுக்கு உரை செய்தவரைப்பற்றியும் அவ்வுரைகளைப்பற்றியும் பின்னெழுதுவாம்.

வரும்.

கடிதம்.

—:○:—

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திராதிபரைச் சாரமாட்டா.

திருநீறு.

தொடர்பு.

—:○:—

முற்கூறியபடி யெனின் பாசுபதமென்னுஞ் சொல் தாந்திரிகரைமட்டிற் குறிப்பதல்ல. அப்பதம் தாந்திரிகரைக் குறிக்குமென்பதற்கு நமது நண்டர் எப்புராண வசனத்தை எடுத்து தகரித்தாரோ அதை உற்றுநோக்கினால் அது வைதிகரையுங் குறிக்குமென்பது இவருக்குத் தெற்றெனப் புலப்படும். அவ்விடம் பாசுபதர்களை இருவகைப்படுத்தி வைதிக பாசுபதரென்றும் அவைதிக பாசுபதரென்றும் எழுதப்பட்டிருப்பதை இவர் இனியேனும் அறிந்தடங்குவாராக. இவர் கொண்ட அகாரண சிவத்துவேஷம் இவரை மேனோக்கவொட்டாது தடுத்ததுபோலும். இனிப் பிற்கூறியபடி ஒப்புவாரெனின், தீக்ஷை முதலிய பதங்கள் வேதசிவாகமங்களிற் கூறிய இருவகைத் தீக்ஷைகளையுங் குறிக்குமாதலால் வேதங்களிற்பல கன்மங்கள் தாந்திரிகங்களாய் ஒழியும். இனி இவ்விதம் யுக்தி எழுதுவது இவர்போல்வார்க்கு ஒப்பத்தக்கதேனும் இதனை மற்றை அறிஞர்கள் ஒப்பாரென்பது வாய்மையாம். இனி முடிவில் நமது நண்டர் தம்மேற் குற்றமில்லாது ஒதுங்கவேண்டிச் சிவனடியார்களுக்குத் திருநீறே உரியதென்றும் வைணவர்களுக்குத் திருமண் உரியதாமென்றும் ஒருவாறு தாம் கண்ட உண்மையை எழுதிவைத்தார். திருநீறு அணிதற்கதிகாரிகள் மூன்றுட் சுக்கலேயன்றிப் பிறரன்று. எங்கும் திருநீறணிதலின் பயன்

[illegible]

[illegible]

ஸாவஶேஷம்.

குறிக்குமிடத்து மோக்ஷமே பயனாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அதன் பயன் மோக்ஷமேயென்று ஏற்படுகின்றது. அதிகாரியும் முமுட்சுவென்றே ஒவ்வோருபநிடதங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இனிக் காலாக்கினி ருத்திரோபநிடத முதலியவற்றில் முமுக்ஷுவே அதிகாரியென்று கூறப்பட்டிருத்தலால் "வேதங்களெல்லாம் ஒரு பொருள்கொண்டன" வென்னும் நியாயத்தால் மற்றைய உபநிடதங்களும் அவ்வதிகாரியைக் கொண்டு முடிதலறிக. இனி இதம்பர (அதற்கெனச் சிறப்பாயெழுந்த) சொற்றொடர்பினும் அந்நியமில்லாச் சொற்றொடர்பு (பலவிஷயங்களைப் பொதுவாய்க் குறிப்பது) பிரமாணமாந் தன்மையிற் குறைவுடைத்தென்பதைப்பற்றி நீரும் ஒப்பவேண்டுமே. ஆதலால் பஸ்மஜாபாலம் பிருஹஜ்ஜாபாலம் காலாக்கினிருத்திரம் இவ்வுபநிடதங்கள் திருநீற்றின் பெருமையை விளக்கவே சிறப்பாக எழுந்தனவாதலால் அவைகளைப் பின்பற்றியே மற்றைய வாக்கியங்களையும் பொருள்படுத்தவேண்டும். அவ்வுபநிடதங்களில் "எல்லா வேதங்களும் வேதவாதிகளாற் கூறப்பட்டுள்ளது" என்றும் "திருநீறு வைதிகம்" என்றும் தொடங்கி அத்திருநீற்றை வைதிகமென வெளியிட்டிருக்க அதைத் தழுவியே அநேக சங்கிதைகளுடன் திருநீற்றையும் விரித்த அதர்வசிரசின் வசனம் முடிவெய்தவேண்டும். இனி இதன் வலிகொண்டு அவ்வுபநிடதங்களில் திருநீறு வைதிகமென்பதை மாற்ற எவ்வாற்றானும் முடியாது. அங்கு எடுத்தோதிய பாசுபதமென்னும் பதம் வைதிகர் தாந்திரிகர் இருவரையும் குறிக்கும் பொதுச்சொல்லாதலாலெனக. இவ்விதம் வேதம் என்னும் பதமும் சுருதி என்னும் பதமும் ஓர்காலத்தும் தாந்திரிகரையே குறிக்கும் சொல்லாகமாட்டாது. விசேடச் சொல்லாகிய வேதம் முதலிய சொற்களால் திருநீறு வைதிகமெனச்சித்தித்தது. ஆதலால் "சாகம் அல்லவோ மந்திரவருணத்தால்" என்று ஆசிரியர் ஜைமினியார் எடுத்தோதிய நியாயத்தால் பொதுச்சொல்லாகிய பசுவென்னுஞ் சொல் சிறப்பாகிய சாகத்தைக் குறித்ததுபோல் வைதிக தாந்திரிகர்களுக்குப் பொதுவாய பாசுபதமென்னுஞ் சொல் சிறப்பாய் வைதிகரிடத்தே பொருட்பொருத்த முடைத்தெனத் துணிக. இனி வேதங்களிலும் தாந்திரிகங்களான கன்மங்கள் ஓதப்பட்டனவென்றெடுத்து வேதங்களிற் சில பாகங்கள் மோகசாஸ்திரங்களெனமொழிதல் வேதியர்க்கழகாமோ! இனி வேதங்களிற் கூறிப்பட்டுள்ள எக்கன்மமேனும் முற்றிலும் தாந்திரிகமெனக்கூறத்துணிந்த ஓர் வேதியனும் உலகத்திலுளனோ? தந்திரங்களிலும் சொல்லப்பட்டன தாந்திரிகங்களெனச் சொல்லலும் பொருந்தாது. சந்தியாவந்தன முதலியவையும் அத்தன்மைத்தாதலினெனக. இனி விதண்டாவாதியாய்நின்று விபூதி தாந்திரிகமென்பீரேல்; சைவதந்திரங்களில் எங்கும் யாகம் சந்நியாசம் இவை கூறப்படாமையால் அக்கினிஹோத்திரத்தில் உண்டான திருநீறும் அதைத் தரிக்கும் ஓர் சந்நியாசியும் கிடைப்பதெங்ஙனம். அந்தமையாதுபற்றித் திருநீறு வைதிகமென்பது மாலயன் முதலிய கடவுளராலும் மறுக்கப்படாத சித்தாந்தமெனத் துணிக.

வரும்.

வேதம். 1.

—:o:—

பத்திராதிபருக்கும் இஷ்டர்களுக்கும் அநேக வந்தனம். ஐயா! ஒன்றாகிய நாலுபங்குடைய ஒப்பற்ற வேதம் வெளிவராவிடில் யாருக்கும் பெருங்குழப்பமுண்டாம். ஏனெனில் விப்பிரன் மட்டிலறியலாமென்றும் மற்றவன் அறியக்கூடாதென்றால் அவன் ஆசாரத்தை யறியாதவனாய் முன்னையதுபோலவே நடப்பான் என்பதிற் றடையென்ன? கடவுள் அந்தணனுக்கொன்றும் மற்றவனுக் கொன்றுமாய் ஏற்படுத்துவாரா? வேதம் தெரிந்தால் தன்னுடைய வேதம் என்றும் தன் மதம் என்றும் தன் தேசம் தன் ஆசாரம் என்று அவனுக்கு அவசியம் அபிமான முண்டாகுமன்றி மற்றதால் அபிமானமுண்டாமோ? வேதம் அறிந்தால் வேதப்படி நடந்து விப்பிரன் முதலியோரை மேன்மைப்படுத்துவான்; இன்றேல் அந்தணர் பெருமையை யறிவனோ! அறிவை (வேதம) அனைவருமறியின் அகமகிழ்ந்து அவ்விதம் நடப்பர் சமயத்தின் முடிவை யறியின் அலக்கணுறாது நிற்பர். மற்ற மதத்தர் கண்டு உங்கள் வேதம் எங்கே கணவரில்லா மங்கையரைப்போன்ற மனிதரோ என்று ஏளனம் செய்வராம். ஆதலான் வேதம் வெளிவராவிடில் ஒற்றுமை மதம் அபிமானம் முதலிய நற்குணங்கள் யாவும் தலைகாட்டாவென்பது திண்ணம்! திண்ணம்!! வேதமில்லாததுலைபரியல்லஇவ்வூரில் லைபரி (Library) வைக்க வாரம்பித்து முதல் (முதல்=வேதம்) இல்லாததினால் விட்டுவிடப்பட்டது. ஓ, கற்றறிந்த சாத்திரிகளே! தேசாபிமானிகளே! மதாபிமானிகளே! ஓ, டிராக்ட் சங்கத்தாரே! பிரீச்சிங் சங்கத்தாரே! பத்திராதிபர்களே! மற்ற இந்துக்களே! தயவுசெய்து இது விஷயத்தில் கவலையெடுங்கள்! அச்சில் தொடுங்கள்! புத்தகத்தை எனக்கொன்று கொடுங்கள்! கொடுங்கள்!! கொடுங்கள்!!!

இராசிபுரம். ந. வை.

~~~~~~~~~~~~~~~~~~~~

கோபுசெட்டிப்பாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்பு.)

முற்காலத்திருலிந்த காசியபர், அத்திரி, பாரத்வாஜர், விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்கினி, வஷிஷ்டர், கௌகிகர்முதலான மகாரிஷிகளிற் சிலர் இராஜாக்களுக்குப் புரோகிதர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருந்ததாகக் காண்கிறதே தவிர இவர்கள் தங்களிஷ்டப்படி அரசுபுரிந்ததாகத் தெரியவில்லை.

முன்னிருந்த இராஜாக்கள் பிராமணர்கள் சொல்லுக்குட்பட்டு அவர்களுடைய நிபந்தனைக்குட்பட்டு நடந்து வந்ததாகக் கிரந்தாந்திரங்களைப் பார்த்தால் தெரியவரும். பின்னும் பிராமணர்கள் இராஜாக்களுக்குப் புரோகிதர்களாயும் ஆசிரியர்களாயும் இருந்தபோதிலும் முன்னிருந்த இராஜாக்கள் பிராமணர்களுக்கு பூஜார்த்த வந்தனாதிகளைச் செய்துவந்தார்களே தவிர அலக்ஷியம் ஒருவராவது செய்யவில்லை.

மேலும் முற்காலத்து இராஜாக்களுள் ஒருவர்க்கொருவர் சீபாவமாகவே துவேஷமுள்ளவராயினும் பிராமணர் விஷயத்தில் மாத்திரம் பக்தி விசுவாச பூஜைகளில் கீழ்ப்படிந்து நடந்ததாக நினைக்கக்கூடும். அப்படி நடக்க அவர்களுக்கு என்ன ஆவசியகமோ? அப்படித்தான் ஒரு இராஜா நடந்துவந்தானா? அப்படியுமல்ல எல்லா இராஜாக்களும் அப்படி நடந்துவந்தார்கள். இதெல்லாம் ஜகதீசுவரனுடைய கட்டுப்பாடு (தெந விநாதிரூண்டேவிநதூதி) என்கிறபடிஜகதீசுவரனன்றியணுவுமசையாது.

முன் சொன்ன மகரிஷிகள் தவேசுவிகளாயும், சாபானுக்கிரக சாமர்த்திய முள்ளவர்களாயும் பிரமஞானிகளாயும் இருந்ததாகக் கிரந்தாந்தங்களாற் றெரியவருகிறபடியால் அவர்களுடைய சந்ததியாரென்று சொல்லப்படும். இப்போதிருக்கிற பிராமணர்களுக்கு அவ்வளவு யோக்கியதை இல்லாவிட்டாலும் இக்காலத்தில் அநேக பிராமணர்களில் சிலர் தங்களுடைய ஜாதிவர்ணத்துக்கு ஏற்பட்டிருக்கிற தர்மங்களை சக்தியானுசாரம்நிறைவேற்றிக்கொண்டுகிரமமாகவே இருக்கிறார்கள்.

பிராமணர்களுக்குரிய முக்கிய விதிகளிற் சில இதனடியில் எழுதப்படுகின்றன,

நித்திய கர்மங்களாவன.

1. ஸ்நானம், 2. சந்தியாவந்தனம், 3. ஔபாஸநம், 4. வேதாத்தியயனம், 5. தேவதார்ச்சனை, 6. வைசுவதேவம் இவைகளை அவசியம் செய்யவேண்டும். செய்யாவிடில் தோஷமுண்டு. ஷடி ஸ்நானாதி ஷட்கர்மங்களையும் செய்வதுமல்லாமல் பகவத்பக்தியும், பகவானுடைய நாமோச்சாரணமும், மதக்கிரந்தங்களின் அபிப்பிராயமும் தெரிந்திருக்கவேண்டும்.

பஞ்சயக்ஞானுஷ்டானம்.

1. தேவயக்ஞம், 2. பிதிருயக்ஞம், 3. மனுஷியயக்ஞம், 4. பூதயக்ஞம், 5. பிரமயக்ஞம் யக்ஞம் என்றால் அவர்களுக்கெல்லாம் திருப்தியை யுண்டாக்கஹோம சுராார்த்ததர்ப்பணம் அன்னதானம் என்றறியத்தகாத மனிதனுக்கு ஞானம் பிறந்து அதனால் மோக்ஷபுருஷார்த்தம் அவசியம் வேண்டும். அது ஆனால் கன்மம் எத்தனைவிதமெனில், லௌகிக கர்மம் என்றும், வைதிக கர்மமென்றும் இரண்டுவிதம். இவ்விரண்டினுள் லௌகிக கர்மம் ஜீவனத்துக்கு ஏதுவாகுமன்றி யதனால் ஞானம் பிறந்து மோக்ஷம் வராது. ஏனைய வைதிககர்மமும் ஐந்துவிதமாயிருக்கும். அது எப்படியெனில். நித்திய, நைமித்திகம், காமிய, நிஷித்த, பிராயச்சித்தம் என்றைந்துவிதம். அவற்றுள் காமிய கர்மத்தினால் ஞானம்வராது சொர்க்கம் மாத்திரம் வரும். நிஷித்த கர்மத்தினால் காலசூத்திராதி நரகங்கள் வரும்.

பிராயச்சித்த கர்மத்தினால் புருஷனுக்குக் கர்மத்தி லதிகாரத்துவமுண்டாக்கித் தோஷத்தைப் போக்கடிக்கும். ஆதலால் இம்மூன்று கர்மமும் ஞானசாதகமல்லாமற்போயிற்று.

நித்திய நைமித்திக கர்மங்களோவெனில், அதுகளும், சாத்துவீக, இராஜஸ், தாமதமென மூன்றுவிதமான கன்மங்களாயிருக்கின்றன. அவற்றுள் இராஜ ஸ்தாமத கர்மங்களிரண்டும் ஜன்மங்களையும் துக்கங்களையும் கொடுக்குமன்றி அவ்விரண்டினாலும் ஞானம் வராது சாத்வீக கர்மத்தில் சித்தசுத்தி வரும். அந்தச் சித்தசுத்தி துவாரா ஞானத்துக்குப் பரம்பரா சாதனமென்று சொல்லப்படும். இது வேதாந்திகளின் முக்கிய கருத்தென அறியவேண்டியது.

வரும்.
~~~~~~~~~~~~~~~~~~~~

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞. ப்ரம்மவித்தியா துவக்கியதுமுதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பயிண்டு செய்யப்பட்ட புத்தகங்கள் 50-இது விலைபெற்றதுபோக பாக்கியுள்ளகாப்பிகள் நாற்பதே; உள்ளகாபி மிகசொற்பமாதலின், ஒருவருடப்புத்தகம 1-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5-ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போனால் வராது.

இந்துடிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இ∴து 1887வருஷம் ஏப்ரல்மீ 27உ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:—இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் வருஷம் 1-இு குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்மீ முதல் மறுவருஷம் மார்ச்சுமீ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா. B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர், ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் W.A. கிருஷ்ணமாசாரியார் B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

கடவுள் துணை.

Terms:—Cash. விலை ரொக்கம்.

NOW READY FOR SALE.

விரோதிவருஷத்திய

ரிப்பன் தமிழ்ப் பாக்கெட் பஞ்சாங்கம்.

விற்பனைக்குத் தயாராக விருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா ஆறு; பிரதி 1-க்கு தபால்கூலி அணா அரை.

பாக்கிங் சார்ஜ் பிரதி 1-க்கு 0-0-6; 10-க்கு 0-2-0; 25-க்கு 0-4-0; 50-க்கு 0-6-0; 100-க்கு 0-8-0.

ஒரேமுறையில் 10 புத்தகங்கள் வாங்குவோர்க்கு 1-ம்; 25-க்கு 3-ம்; 50-க்கு 7-ம்; 1000-க்கு 15-ம்; கம்மீஷன் கொடுக்கப்படும்.

கொஞ்சம் காப்பிகள்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன வாகலின் வேண்டுவோர் கூடிய சீக்கிரம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மதராஸ் ரிப்பன்பிரெஸ், 316-தம்புசெட்டி வீதி சென்னை.

இங்ஙனம், சை. இரத்தினசெட்டியார், சொந்தக்காரர்.

ஸ்ரீ சிதம்பரம் ப்ரஹ்மவித்யா ப்ரெஸ்ஸில் கிடைக்கும்
க்ரந்தாக்ஷர புஸ்தகங்கள்

ஸ்ரீமத்விஜயீந்த்ர தீர்த்த விரசித ... ஸ்ரீ ... ப்ரகாசிகா	0	௧	0
ஸ்ரீ சங்கராசார்ய விரசிதா ... வேதாந்த ... ஸ்ரீ ஹரிஸ்தவ ... சதகம் ...	0	௧	0
பாதுகாஸஹஸ்ர (ஸாத்யம்) தயா ஸ்ரீ வேதாந்ததேசிக விரசித ... ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கவி விரசித ...	0	௧	0
ஸ்ரீ வேதாந்த ... ஸூக்தி: ...	0	0	௯
ஸ்ரீ ... (ஸ்ரீ ... விரசித ...	0	0	௯
ஸ்ரீ ... விரசிதம் ...	0	0	௯
... நாராயண கவி விரசித ... நாடகம் ...	0	௧	0
... ஸ்ரீநிவாஸகவி ...	0	௧	0
வேதாந்த ... (ஸாரம்)	0	௧	0
வேதாந்த ...	0	0	௯
வேதாந்த ...	0	௧	௯
வேதாந்த ...	0	0	௯
... ஸ்தோத்ரம்	0	௧	௯
ஸ்ரீ ... மஹாகாவ்யம்	0	௯	
... நாடகம்	0	௫	0

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, Chidambaram.